


# ஜாலான் மஸ்ஜிட் இந்தியா பழைய நிலைக்குத் திரும்ப வேண்டும்

## பொதுமக்கள் கோரிக்கை

கோலாலம்பூர், செப். 2-

அண்மையில் தலைநகர் ஜாலான் மஸ்ஜிட் இந்தியாவில் நிகழ்ந்த மண் உள்வாங்கிய சம்பவத்தைத் தொடர்ந்து அப்பகுதி பல்வேறு வகைகளில் பாதிக்கப்பட்டுள்ளதால் அதனை விரைவில் சீர்படுத்தும் நடவடிக்கையில் சம்பந்தப்பட்ட தரப்பினர் ஈடுபட வேண்டும் என அங்குள்ள வியாபாரிகளும் பொதுமக்களும் நேற்று வலியுறுத்தினர்.

அண்மையில் இப்பகுதியில் மண் உள்வாங்கிய சம்பவத்தைத் தொடர்ந்து பொதுமக்கள் இங்கு வருவது குறைந்துபோனதால் வியாபாரிகள் பெரும் நஷ்டத்தை எதிர்நோக்கி வருவதாக அங்கு பணிபுரியும் ஷாரின் ஷமிமா பஹாருடின் (வயது 47) கூறினார்.

அப்பகுதி மிகவும் பாதுகாப்பானது என மக்கள் உணரும் வகையில் அப்பகுதிகள் தொடர்ந்து மேம்படுத்தப்பட வேண்டும் என அவர் கேட்டுக் கொண்டார்.

மண் உள்வாங்கிய சம்பவத்தில் காணாமல்போன எஸ். விஜயலெட்சுமியைத் தேடும் பணி நிறுத்தப்பட்டுள்ளதால் இப்பகுதியை மீண்டும் பழைய நிலைக்குக் கொண்டு வருவதில் கோலாலம்பூர் மாநகர் மன்றம் முழுமூச்சாக நடவடிக்கையில் இறங்க வேண்டும் என அவர் கேட்டுக் கொண்டார்.

இப்பகுதியில் திடீரென 10 மீட்டர் ஆழம் வரை மண் உள்வாங்கிய சம்பவம் நிகழ்ந்துள்ளதால் இங்கு வருவதற்கு பொதுமக்கள் அச்சம் கொண்டுள்ளனர். இதனால் இப்பகுதியில் வியாபாரமும் குறைந்தது. இதனால் இங்குள்ள வியாபாரிகளும் பெரும் பாதிப்புக்குள்ளாகியதாக அவர்தெரிவித்தார். இதனிடையே ஜாலான் மஸ்ஜிட் இந்தியா பகுதி மீண்டும் பொதுமக்களுக்குத் திறக்கப்பட்டுள்ளது இப்பகுதியிலுள்ள வியாபாரிகளுக்கு நல்வழியைக் காட்டும் என முகமட் அலி ஹசான் (வயது 40) என்பவர் கூறினார்.

நானும் என் குடும்ப உறுப்பினர்களும் அடிக்கடி இப்பகுதிக்கு வந்து பொருட்களை வாங்குவோம். ஆனால் அண்மையில் மண் உள்வாங்கிய சம்பவத்தைத் தொடர்ந்து நாங்கள் இப்பகுதிக்கு வருவதை நிறுத்திக்கொண்டதாக அவர் சொன்னார்.

இதனிடையே காணாமல்போன விஜயலெட்சுமியைத் தேடும் பணி நிறுத்தப்பட்டதைத் தொடர்ந்து இப்பகுதி பொதுமக்களுக்காக மீண்டும் திறக்கப்பட்டுள்ளதால் தாம் குடும்ப உறுப்பினர்களுடன் மஸ்ஜிட் இந்தியாவுக்கு வந்ததாக அவர் கூறினார்.

ஜாலான் மஸ்ஜிட் இந்தியாவுக்கு நாள்தோறும் மக்கள் வருகை புரிவர் என்பதால் இதுபோன்ற சம்பவங்கள் மீண்டும் நிகழாமல் இருப்பதற்கு கோலாலம்பூர் மாநகர் மன்றம் உறுதி செய்ய வேண்டும் எனவும் அவர் கேட்டுக் கொண்டார்.

ஜாலான் மஸ்ஜிட் இந்தியாவில் நிகழ்ந்த மண் உள்வாங்கும் சம்பவத்தில் காணாமல்போன விஜயலெட்சுமியைத் தேடும் பணி நிறுத்தப்பட்டதாக கூட்டரசுப் பிரதேச அமைச்சர் டாக்டர் ஸலிஹா முஸ்தாபா நேற்று முன்தினம் அறிவித்திருந்தார்.